Register No. | | | | | | | | |

**FA9A** **5052–21**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

**B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Five-year Regular Course)

Fifth Year – Ninth Semester

**CRIMINAL PROCEDURE CODE**

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

**PART A** — (2 × 12 = 24 marks)

**Answer TWO of the following in about 500 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the powers and functions of Director of Prosecution, Public Prosecutor and Assistant Public Prosecutor.

   பொது வழக்கீட்டு இயக்குநர், குற்றவியல் அரசு வழக்கறிஞர் மற்றும் உதவி குற்றவியல் அரசு வழக்கறிஞர் இவர்களின் அதிகாரம் மற்றும் செயல்பாடுகளை விவரிக்கவும்.

2. Explain the victim compensation method under the Criminal Procedure (Amendment) Act, 2009.

   குற்றவியல் நடைமுறை திருத்தச்சட்டம் 2009-ன் கீழ் பாதிக்கப்பட்டோர் இழப்பீடு பெறும் முறையைப் பற்றி விளக்குக.

3. What are the changes made in the present Criminal Procedure Code to ensure a fair trial to the accused person?

   குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு ஓர் நேரிய விசாரணையை உறுதிப்படுத்த தற்போது உள்ள குற்றவியல் நடைமுறை சட்டத்தில் கொண்டுவரப்பட்டுள்ள மாற்றங்கள் யாவை?

**PART B** — (2 × 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Differentiate between child in need of care and protection from juvenile in conflict with law.

   பாதுகாப்பு மற்றும் கவனம் தேவைப்படும் சிறார் என்பதை சட்ட முரண்பாடுடைய இளவர் என்பதிலிருந்து வேறுபடுத்துக.

5. What was the principal object of Criminal Procedure Code 1973? Discuss the recent amendments on Criminal Procedure Code 1973.

குற்றவியல் நடைமுறை சட்டம் 1973-ன் முக்கிய நோக்கம் யாது? குற்றவியல் நடைமுறை சட்டம் 1973-ன் மீது சமீபகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் யாவை?

6. Explain the circumstances under which a convicted person may be released on probation.

குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவரை நன்னடத்தை கண்காணிப்பில் விடுவிக்கும் சூழ்நிலைகளை விவரிக்கவும்.

**PART C** — (5 × 4 = 20 marks)

7. **Write short notes on FIVE of the following :**

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Compounding of offence.

குற்றச் சமாதானம்/குற்ற சமரசம்.

(b) Effect of delay in lodging First Information Report.

முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்வதில் தாமதத்தின் தாக்கம்.

(c) False weights and measures.

தவறான எடை மற்றும் அளவீடு கருவிகள்.

(d) Inherent Powers of High Court.

உயர்நீதிமன்றத்தின் உள்ளார்ந்த அதிகாரம்.

(e) Habitual offenders.

குற்றம் செய்வதை வழக்கமாக கொண்டு இருப்பவர்.

(f) Age of Juvenility.

இளம் சிறார் வயது.

(g) First offender to be released on admonition.

முதல் முறை தவறு செய்யும் நபரை எச்சரித்து விடுவித்தல்.

**PART D** — (2 × 6 = 12 marks)

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'X' after committing murder at Chennai absconded. Afterwards he was caught by police at Puducherry. Discuss the place of trial.

'X' என்பவர் சென்னையில் ஒரு கொலையைச் செய்து விட்டு தலைமறைவாகிறார். பின்னர் அவரைப் புதுச்சேரியில் காவல் துறையினர் கைது செய்கிறார்கள். குற்ற விசாரணை எங்கு நடத்தப்படலாம் என்பதை விவாதிக்கவும்.

9. ‘A’ a boy, was abducted from Madurai by a gang and he was compelled to beg at Chennai. Discuss the place of trial of the gang.

ஒரு கும்பல் ‘அ’ என்ற சிறுவனை மதுரையில் இருந்து கடத்தி வந்து சென்னையில் பிச்சை எடுக்க கட்டாயப்படுத்துகிறது. அக்கும்பலை எங்கு குற்ற விசாரணை செய்யலாம் என்பதனை விவாதிக்கவும்.

10. Whether simultaneous issue of both the process of warrant of arrest and proclamation of the offender is a valid one?

ஓர் நபருக்கு எதிராக கைது ஆணை பிறப்பிக்கும் அதே சமயத்தில் அவரை அறிவிக்கப்பட்ட குற்றவாளியாகவும் அறிவித்து அறிவிப்பு வெளியிட செய்தால் அது செல்லத்தக்கது ஆகுமா?

———————

Register No. | | | | | | | | |

**FA9B**

**5053–21**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

**B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Five-year Regular Course)

Fifth Year – Ninth Semester

**CIVIL PROCEDURE CODE**

Time : $2\frac{1}{2}$ hours  Maximum : 70 marks

**PART A** — (2 × 12 = 24 marks)

**Answer TWO of the following in about 500 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What are the circumstances in which and how a fresh period of limitation is to be computed in respect of any property or right to recover a debt?

   ஒரு சொத்து தொடர்பான அல்லது ஒரு கடன் திருப்பிப் பெறும் உரிமை தொடர்பான ஒரு புதிய காலவரையறை எந்தச் சூழ்நிலைகளில் எப்படிக் கணக்கிடப்பட வேண்டும்?

2. What is meant by "temporary injunction"? State the principles and discretionary powers of the court in granting temporary injunction?

   ''இடைக்கால தடை ஆணை'' என்றால் என்ன? நீதிமன்றம் இடைக்கால தடை ஆணை வழங்குவதற்கான கோட்பாடுகளையும் தன் விருப்புரிமை அதிகாரம் பற்றியும் கூறவும்.

3. Distinguish between:

   கீழ்கண்டவைகளை வேறுபடுத்துக.

   (a) Judgement and decree

   தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை.

   (b) Revision and Review.

   சீராய்வு மற்றும் மறு ஆய்வு.

**PART B** — (2 × 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What is second appeal? Where it should be filed? Explain the recent amendment relating to it?

   இரண்டாம் மேல் முறையீடு என்றால் என்ன? அது எங்கு தாக்கல் செய்யப்பட வேண்டும்? இரண்டாம் மேல்முறையீட்டில் தற்பொழுது ஏற்பட்ட மாற்றத்தை விவரி.

5. Explain the rules relating to joinder of parties and joinder of causes of action.
வழக்கினர்கள் சேர்க்கை வழக்கு மூலங்களின் சேர்க்கை ஆகியவை தொடர்பான விதிகளை விளக்குக.

6. What are the provisions and the safeguards made for the arrest and detention of a judgment debtor?
ஒரு தீர்ப்புக் கடனாளியைக் கைது செய்து காவலில் வைப்பதற்கான வகையங்களும், பாதுகாப்புகளும் யாவை?

## PART C — (5 × 4 = 20 marks)

7. **Write short notes on FIVE of the following:**
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Affidavit.
ஆணையுறுதி ஆவணம்.

(b) Set off and counter claim.
எதிரிடை வாதமும் எதிர்பாத்தியமும்.

(c) Caveat.
முன்னெச்சரிக்கை மனு.

(d) Garnishee order.
பற்றுகைப் பொருள் வைத்திருக்க ஆணை.

(e) Precept.
பற்றாணை.

(f) Mesne Profit.
இடைக்கால வருமானம்.

(g) Rejection of plaint
வழக்குரை மறுத்தளிப்பு.

## PART D — (2 × 6 = 12 marks)

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' filed a suit against 'B' on a promissory note as an indigent person. The suit was dismissed by the court. What is the remedy available to 'A' and the Government against the dismissal?
கடனுறுதிச் சீட்டு ஒன்றின் அடிப்படையில் 'A' என்பவர் 'B' என்பவர் மீது வழக்கிடவறியராக வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்கிறார். நீதிமன்றம் வழக்கைத் தள்ளுபடி செய்கிறது. தள்ளுபடிக்கு எதிராக 'A' என்பவருக்கும் அரசிற்கும் உள்ள தீர்வழி யாது?

9. 'X' executed a general power of attorney in favour of 'Y' to look after his properties at Tamil Nadu. 'X' died at Gujarat without executing any document relating to his properties. 'P' and 'Q' approached 'Y' against each other claiming absolute right over the properties of 'X' — Decide.

'X' என்பவர் ஒரு பொது அதிகார ஆவணத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள தனது சொத்துக்களைப் பராமரிக்கும் பொறுப்பை 'Y' என்பவரிடம் விட்டு விட்டார். பின்னர் 'X' தனது சொத்துக்கள் குறித்து எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் குஜராத்தில் இறந்து விட்டார். 'P' என்பவரும் 'Q' என்பவரும் ஒருவருக்கு எதிராக மற்றவர் 'Y'யிடம் 'X'யின் சொத்துக்களின் முழு உரிமையைக் கோருகின்றனர். தீர்மானிக்கவும்.

10. An ex parte decree has been passed against 'Z'. The time prescribed for filing an application to set aside the decree is 30 days. But 'Z' is approaching the counsel after 100 days. Advise 'Z'.

'Z' என்பவருக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக தீர்ப்பாணை வழங்கப்படுகிறது. அந்த ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையை ரத்து செய்யக் கோரி 30 நாட்களுக்குள் மனுதாக்கல் செய்யப்பட வேண்டும். ஆனால் 'Z' 100 நாட்கள் கழித்து வழக்குரைஞரை அணுகுகிறார். 'Z'க்கு அறிவுரை கூறுக.

**FA9C**

Register No. [ ]

5054-21

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

**B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Five-year Regular Course)

Fifth Year – Ninth Semester

**TAXATION LAW**

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

**PART A — (2 × 12 = 24 marks)**

**Answer TWO of the following in about 500 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Give an account of assessment of income tax under the head "income from salary" under the Income Tax Act, 1961.
   வருமான வரிச்சட்டம் 1961-ன் கீழ் சம்பள வருமானம் என்னும் தலைப்பில் வரும் வருமானத்தை மதிப்பீடு செய்வதை தொகுத்துக் கூறுக.

2. State the evils of black money. How black money can be eradicated?
   கருப்புப் பணத்தினுடைய தீங்குகளைக் கூறவும். கருப்புப் பணத்தை எவ்வாறு ஒழிக்க முடியும்?

3. Define capital asset. Explain income from capital gains under the Income Tax Act 1961.
   மூலதனச் சொத்தை வரையறுக்கவும். வருமான வரிச்சட்டம் 1961-ன் படி மூலதன ஆதாயத்தில் நிகழும் வருமானத்தை விளக்குக.

**PART B — (2 × 7 = 14 marks)**

**Answer TWO of the following in about 300 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Give an account of registration of a business under the Central Goods and Services Tax Act, 2017.
   மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் 2017-ன் கீழ் வணிகத்தைப் பதிவு செய்யும் முறையை தொகுத்துக் கூறுக.

5. Discuss the important provisions of the Constitutional Law of India on Taxation.
   இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இருக்கும் வரிவிதிப்பிற்கான முக்கிய வகையங்களை விவாதிக்கவும்.

6. Discuss about the collection and levy of tax under the Integrated Goods and Services Tax Act.
   ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் வரி விதிப்பு மற்றும் வசூலிப்புப் பற்றி விவாதிக்கவும்.

**PART C — (5 × 4 = 20 marks)**

7. **Write short notes on FIVE of the following :**
   பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

   (a) Regressive Tax.
   பின்னடையும் வரி.

   (b) Aircraft goods in the Customs Act.
   சுங்க வரி சட்டத்தில் வானவூர்தி சரக்குகள்.

(c) Person under the Income Tax Act, 1961.
வருமான வரிச் சட்டம் 1961-ன் கீழ் நபர்.

(d) Casual Income.
தற்செயல் வருமானம்.

(e) GST Council.
சரக்குகள் மற்றும் சேவை வரிக் குழு.

(f) Tax rebate.
வரிக் கழிவுகள்.

(g) Double taxation.
இரட்டை வரிவிதிப்பு.

**PART D — (2 × 6 = 12 marks)**

**Answer TWO of the following by referring to relevant provisions of law.**
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்களைக் கூறி விடையளிக்கவும்.

8. Explain by giving provisions of law, how the following are treated for the assessment of Income Tax for the assessment year 2020-2021.
பின்வருவனவற்றிற்கு வரி மதிப்பீட்டாண்டு 2020-2021-யிற்கு வருமான வரி மதிப்பிடப்படும் சட்ட வகையங்களை எடுத்துக்காட்டி விவரிக்க.

(a) Income by way of Dividends.
பங்கு ஆதாயத்தில் பெறப்படும் வருமானம்.

(b) Income from exporting computer software.
கணினி மென்பொருளை ஏற்றுமதி செய்வதால் பெறும் வருமானம்.

9. Explain with provisions of law how the following are treated to fix the taxable income.
பின்வருவனவற்றிற்குரிய வரி விதிப்பிற்குரிய வருமானம் கணக்கிடும் முறையினை சட்ட வகையங்களை மேற்கோள்காட்டி விவரிக்க.

(a) Deduction in respect of expenses for the medical treatment of a member of Hindu Undivided Family.
பிரிக்கப்படாத இந்து குடும்பத்தின் உறுப்பினர் ஒருவரின் மருத்துவ சிகிச்சைக்கான செலவு குறித்த கழிவு.

(b) Deduction in respect of interest on loan taken for residential purpose.
வீடு கட்டுவதற்காக பெற்ற கடனை செலுத்திய வட்டி குறித்தான கழிவு.

10. Mr. Mohan received Rs.30,000/- (thirty thousand) as house rent for his home. The fair rent is Rs.32,000 per month. The standard rent is Rs.29,000 (twenty nine thousand) per month. Municipal value is Rs.31,000 (thirty one thousand) per month. Calculate the annual value of the house property for the assessment year 2019-2020.
மோகன் என்பவர் அவரது வீட்டிற்கு ரூ.30,000 வீட்டு வாடகையாகப் பெறுகின்றார். அதன் நியாய வாடகை மாதம் ரூ.32,000 ஆகும். அதன் நிலையான வாடகை மாதம் ரூ.29,000 ஆகும். நகராட்சி மதிப்பு மாதம் ரூ.31,000 ஆகும். அவ்வீட்டுச் சொத்தின் ஆண்டு மதிப்பை 2019-2020 மதிப்பீட்டு ஆண்டிற்கு கணக்கிடுக.

———————